# இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு
## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு
## குடிவரவு மற்றும் குடியகழ்வுத் திணைக்களம்

# விலைமனுக்களுக்கான அழைப்பு

# குடிவரவு மற்றும் குடியகழ்வுத் திணைக்களத்திற்கு Core Switch ஐ வழங்குதல், நிறுவுதல், கட்டமைத்தல் மற்றும் பராமரிப்பதற்கான பெறுகை

**ஒப்பந்த இல.: DIE/PRO/01/2024/28**

1. குடிவரவு மற்றும் குடியகழ்வுத் திணைக்களத்திற்கு Core Switch ஐ வழங்குதல், நிறுவுதல், கட்டமைத்தல் மற்றும் பராமரிப்பதற்கான பெறுகைக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை குடிவரவு மற்றும் குடியகழ்வுத் திணைக்களத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் அழைக்கின்றார்.

2. தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் கீழ் இந்த விலைமனுக் கோரல் நடாத்தப்படும்.

3. இதில் ஆர்வமுள்ள மற்றும் தகைமையுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணி வரை 011 - 2101559 எனும் தொலைபேசி இலக்கத்தைத் தொடர்புகொள்ளலாம். விலைமனு ஆவணங்களை எவ்வித கட்டணமும் இன்றி 2024-09-27ஆம் திகதி முதல் 2024-10-18ஆம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணி வரை திணைக்களத்திற்கு வருகை தந்து அல்லது இணையதளத்தில் (www.immigration.lk) பரீட்சித்துப் பார்க்கலாம்.

4. இதற்காக மீளளிக்கப்படாத பத்தாயிரம் ரூபா (ரூ. 10,000.00) கட்டணத்தைச் செலுத்தி 7ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் உள்ள குடிவரவு மற்றும் குடியகழ்வுத் திணைக்களத்தின் கொள்முதல் பிரிவின் பிரதிக் கட்டுப்பாட்டாளர் (பெறுகைகள்) அவர்களுக்கு எழுத்துமூல கோரிக்கையொன்றை சமர்ப்பிப்பதன் மூலம் 2024-09-27ஆம் திகதி முதல் 2024-10-18ஆம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணி வரை முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கட்டணம் ரொக்கப் பணமாக மாத்திரம் செலுத்தப்படல் வேண்டும்.

5. பூரணப்படுத்தப்பட்ட விலைமனுக்கள் "மூலப் பிரதி" மற்றும் "நகல் பிரதி" என தனித்தனியாக கடித உறையிலிட்டு அந்த உறைகளை வேறொரு உறையிலிட்டு முத்திரைக் குறியிட்டு கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு 2024-10-21ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு அல்லது முன்னர் கிடைக்கக்கூடியவாறு 7 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பலாம் அல்லது நேரடியாக ஒப்படைக்கலாம். விலைமனு சமர்ப்பிக்கப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் IFB இலக்கத்தைக் குறிப்பிடுதல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் கோரப்பட்டு முடிந்தவுடன் 2024-10-21ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு 7 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு சமுகமளிப்பதற்கு விருப்பத்தைத் தெரிவித்திருந்த விலைமனுதாரர்களினது பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

6. விலைமனுதாரர்களினால் சமர்ப்பிக்கப்படும் விலைமனு, விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதியிலிருந்து தொண்ணூற்றியொரு (91) நாட்களுக்கு அல்லது ஏதேனுமொரு நீடிக்கப்படும் காலப்பகுதிக்கு செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும். சகல விலைமனுக்களுடனும் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் செயற்படும் வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்ட உத்தரவாதமாக இரண்டு இலட்சம் ரூபா (ரூபா 200,000.00) பெறுமதியான விலைமனுப் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

7. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2024-10-07ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு பத்தரமுல்ல, ஸ்ரீ சுபுத்திபுர வீதி, "சுஹுருபாய" 05ஆம் மாடியிலுள்ள குடிவரவு மற்றும் குடியகழ்வுத் திணைக்களத்தின் பெறுகைப் பிரிவில் இடம்பெறும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**குடிவரவு மற்றும் குடியகழ்வுத் திணைக்களம்.**